அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம், வெள்ளாளகுண்டம் ஊராட்சி மன்ற தலைவர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.P.காசிலிங்கம்.,

ந.க.எண். 01/2024 நாள்10.01.2024

பொருள் மனைப்பிரிவு – சேலம் மாவட்டம்/சேலம் வட்டம்– அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம் வெள்ளாளகுண்டம் ஊராட்சி ச.எண்.91/1, 91/2, 91/3,91/4,91/5,91/6A,91/9,91/10,91/11 A,91/12,91/13 மற்றும் 91/14 இல் 6.5650 ஏக்கர் (அல்லது) 26567.60 ச.மீ பரப்பில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – உத்தேச சாலைகள் மற்றும் பூங்காவினை ஒப்படைத்தது - குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது – ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை 1.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.19799/2020 போ, நாள்.24.12.2020.

2.அரசாணை எண்138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். நாள்.04.06.2004.

3.அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்31.01.2020.

4.அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை யுடி4(3) நாள். நாள்.23.09.2020.

5.அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள். நாள்.09.12.2020.

6.அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017–வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.30.08.2017.

7.நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/ஏல்ஏ1,நாள்.08.09.2017.

8. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.2013 / 2022 / சேமா–3, நாள்.16.06.2022, 08.08.2022 மற்றும் 19.08.2022.

9. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.2013/2022/சேமா–3,நாள்.22.09.2022.

10.ஊராட்சி மன்ற தலைவர், வெள்ளாளகுண்டம் அவர்களுக்கு வழங்கப்பட்ட தான பத்தரம் எண்.4026/2022, நாள்.25.07.2022 மற்றும் பிழைதிருத்தல் தானபத்திரம் ஆவண எண்.4512/2022, நாள்.23.08.2022.

11.தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்க்கு வழங்கப்பட்ட தான பத்திரம் எண்.4027/2022, நாள்.25.07.2022.

12. வெள்ளாளகுண்டம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் தீர்மான எண். 13, நாள். 28.07.2023.

உத்தரவு :

அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளாளகுண்டம் ஊராட்சி ச.எண்.91/1, 91/2, 91/3,91/4,91/5,91/6A,91/9,91/10,91/11 A,91/12,91/13 மற்றும் 91/14 இல் 6.5650 ஏக்கர் (அல்லது) 26567.60 ச.மீ பரப்பளவில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் ம.வ/ந.ஊ.இ(சே.மா) எண்.59/2022 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட விவரப்படி தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் பார்வை 9ல் காணும் உத்தரவில் வழங்கப்பட்டுள்ளது.

| விபரம் | பரப்பளவு / விழுக்காடு |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 6.5650 ஏக்கர் (அல்லது) 26567.60 ச.மீ |
| கோரிய மனைகள் | 128 |
| ஒதுக்கிய மனைகள்(EWS மனைகள் உட்பட) | 117 |
| EWS மனைகளின் எண்ணிக்கை | 32 |
| EWS மனை எண்கள் | 9–13,16,17,24–28,68–75,88–99 |
| EWS மனைகளின் பரப்பளவு | 1792.44ச.மீ(10.18%) |

மேலும் 1793.42 ச.மீ (10.18 % ) பூங்கா ஒதுக்கீடுக்கும் 8965.94 ச.மீ உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் முலைமுடுக்குகள், சாலை விஸ்தரிப்பு 1.2 உட்பட்ட உள்ளாட்சிக்கும் 103.94ச.மீ (0.59 % ) பொது உபயோக உள்ளாட்சிக்கும் மற்றும் 96.02 ச.மீ (0.54 % ) TANGEDCO –க்கும் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 9ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 10 காணும் விவரப்படி உள்ளாட்சிக்கும் மற்றும் 11–ல் காணும் விவரப்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும்(TANGEDCO) தானம் செய்யப்பட்டுள்ளது. பார்வை 12 ன்படி இம்மனைப்பிரிவுக்கு வெள்ளாளகுண்டம் ஊராட்சியால் மன்ற தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேலும் பார்வை 9ல் காணும் உத்தரவில் தெரிவித்துள்ளவாறு கூராய்வு கட்டணம் மற்றும் 3% நிலபயன் மாற்றக் கட்டணமாக ரூ.1,05,100/–(ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்து ஆயிரத்து நூறு மட்டும்) 24.08.2023 மற்றும் 09.10.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே வெள்ளாளகுண்டம் ஊராட்சி ச.எண்.91/1, 91/2, 91/3,91/4,91/5,91/6A,91/9,91/10,91/11 A,91/12,91/13 மற்றும் 91/14 இல் 6.5650 ஏக்கர் (அல்லது) 26567.60 ச.மீ பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை 9ல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.
இணைப்பு; வரைபடம்

P.கலைலிங்கம்
தலைவர்
தலைவர்,
ஊராட்சி மன்றம்
வெள்ளாளகுண்டம் ஊராட்சி,
வெள்ளாளகுண்டம்.
அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம்.

பெறுதல் :

திரு.எம்.குறள்மணி, திரு.எம்.தமிழ்மணி, திரு.எம்.உதயகுமார், திரு.எம்.சக்திவேல்,
திரு.எம்.அருள்மொழி மற்றும் திரு.கே.செந்தில்குமார்.
க.எண்.330/1, சிவா நகர் முதல் குறுக்கு தெரு,
சன்னியாசி குண்டு விரிவு, கிச்சிபாளையம்,
சேலம் – 636015.

நகல்:

1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்.
2.வட்டாட்சியர், வாழப்பாடி.
3.சார் பதிவாளர், வாழப்பாடி.
4.வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், அயோத்தியாப்பட்டணம்.